# வகுப்பு - 10

## இயல் - 2

### உரைநடை உலகம்

### கேட்கிறதா என் குரல்!

**பலவுள் தெரிக**

1. **செய்தி 1: ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக்காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்**

**செய்தி 2 : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.**

**செய்தி 3 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.**

அ) செய்தி 1 மட்டும் சரி　　ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி　　ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி
விடை : ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

2. **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க**

i) கொண்டல் - 1. மேற்கு
ii) கோடை - 2. தெற்கு
iii) வாடை - 3. கிழக்கு
iv) தென்றல் - 4. வடக்கு

அ) 1, 2, 3, 4　　ஆ) 3, 1, 4, 2　　அ) 4, 3, 2, 1　　அ) 3, 4, 1, 2
விடை : ஆ) 3, 1, 4, 2

**குறுவினா**

1. **‘நமக்கு உயிர் காற்று**
**காற்றுக்கு வரம் மரம் - மரங்களை**
**வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்’**

இது போன்ற உலகக்காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

♣ உயிர்களின் சுவாசம் காற்று!

காற்றின் சுவாசம் மரம் !

♣ தூய்மையை நேசிப்போம்!
தூய காற்றைச்சுவாசிப்போம்!

1. **உயிராக நான் பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் ____ முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றி பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப்பற்றி பேசினால் ____ உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.**

- ❖ நானே! நீர்
- ❖ உலகில் முக்கால் பாகம் நான்
- ❖ நான் இல்லை என்றால் உலகம் இல்லை
- ❖ ஆதவனின் அணைப்பில் கருவுற்று
- ❖ மேகமாய் வளர்ந்து
- ❖ மழையாய் பிறப்பேன் நான்
- ❖ விண்ணிலிருந்து நான் விழுந்தால்
- ❖ என்னைக் கண்டு உலகம் சிரிக்கும்
- ❖ மலையில் விழுந்து
- ❖ நதியில் ஓடி
- ❖ கடலில் சங்கமிக்கும்
- ❖ சரித்திர நாயகன் நான்

**சிறுவினா**

1. **சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.**

**மின்விசிறிக்காற்று** : நண்பா! வா எங்கெல்லாம் சுற்றித்திரிந்து வருகிறாய்? என்னைப் போல் நிலையாக ஓரிடத்திலிருந்து வீசக் கூடாதா.

**சோலைக்காற்று** : நீ ஓரிடத்தில் இருந்து நிலையாக வீசினாலும் உன்னை இயக்க ஒருவர் தேவை. அது மட்டுமல்லாமல் நீ கொடுக்கும் வெப்பக்காற்றை மனிதர்கள் வேறு வழியின்றி பயன்படுத்துகின்றனர். மின்சாரம் தடைப்பட்டாலும் மனிதர்கள் உன்னை இயக்க முடியாது.

**மின்விசிறிக்காற்று** : மனிதர்கள் உன்னை விரும்புகிறார்களா?

**சோலைக்காற்று** : ஆம் நான் மக்களுக்குக் குளிர்ந்த காற்றைக் கொடுக்கிறேன். என்னிலிருந்து மின்சாரம்



Next Generation School

தயாரிக்கின்றனர். காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடத்திலும் தமிழகம் முதல் இடத்திலும் உள்ளது. புதுப்பிக்கக் கூடிய வளமான என்னைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும் போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிம வளங்கள் பாதுகாக்கப்படுகிறது

**மினிவிசிறிக்காற்று** : இத்தனை சிறப்புகள் கொண்ட உன்னை வைத்து ஒரு புது மொழியை உலகிற்குக் கூறப்போகிறேன்

**சோலைக்காற்று** : அப்படியா! அப்புதுமொழி யாது?

**மினிவிசிறிக்காற்று** : "காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக்கொள்".

## நெடுவினா

1. **மலர்ந்தும் மலராத பாதி மலர் போல**

**வளரும் விழி வண்ணமே – வந்து**

**விடிந்தும் விடியாத காலைப்பொழுதாக**

**விளைந்த கலை அன்னமே**

**நதியில் விளையாடி கொடியில் தலைசீவி**

**நடந்த இளந்தென்றலே – வளர்**

**பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு**

**பொலிந்த தமிழ் மன்றமே**

-கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும், கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

**காற்றைப் பாராட்டல் :**

மலர்ந்த மலராத பாதி மலரையும், விடிந்தும் விடியாத காலைப் பொழுதையும் விரும்பாதார் எவருமில்லை. அனைவரும் காற்றாகிய உன்னையும் நீ இளந்தென்றலாக வரும்போது விரும்புவர் எனக் குறிப்பிட்டுள்ளார் கண்ணதாசன். காற்றானது நதிகளை வருடியும், செடி கொடிகளை வருடியும் இளந்தென்றலாக வருகிறது. காற்றைப்போலவே தமிழும் அனைவராலும் விரும்பத் தக்கதாய் இருக்கிறது. தெற்கிலுள்ள பொதிகை மலையில் தோன்றிய தமிழுக்கு மதுரையிலேயே சங்கம் வைத்து அழகிய தமிழ் வளர்த்ததாகவும் கருத்துக் கொள்ளலாம்.

**கவிநயம் :**

கவிஞர் கண்ணதாசனின் பாடலில் எதுகை, மோனை, இயைபு இயைந்தோடும் வகையிலும் கற்பனை காட்சியளிக்கும் வகையிலும், அணிஅழகுற வகையிலும், சந்த தாளமிட்டு சொந்தம் கொண்டாடும் தன் கவி நயத்தைக் காட்சிபடுத்தியுள்ளார்.

**சான்று :**

**மோனை** : **வ**ளரும் **வ**ண்ணமே
**எதுகை** : ந**தி**யில் பொ**தி**கை
**முரண்** : மலர்ந்தும் × மலராத
விடிந்தும் × விடியாத
**இயைபு** : வண்ண**மே**, அன்ன**மே**
**அணி** : பாதி மலர் **போல** வளரும் விழி வண்ணமே (உவமையணி வந்துள்ளது)

**கூடுதல் வினாக்கள்**

**பலவுள் தெரிக**

1. **தென்மேற்குப் பருவக்காற்று இந்தியாவிற்கு எத்தனை விழுக்காடு மழைப் பொழிவினைத் தருகிறது?**

அ) ஐம்பது ஆ) அறுபது இ) எழுபது ஈ) எண்பது

**விடை : இ) எழுபது**

2. **தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு எப்பாடல்களைத் தாய்மொழியில் எழுதி வைத்துப் பாடுகிறார்கள்?**

அ) திருமந்திரம். திருவாசகம் ஆ) திருக்குறள், திருமந்திரம்
இ) திருவருட்பா, திருப்பாவை ஈ) திருவெம்பாவை, திருப்பாவை
**விடை : ஈ) திருவெம்பாவை, திருப்பாவை**

3. **பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| 1. | மூச்சு | - | அ) நீர் |
| 2. | தாகம் | - | ஆ) நிலம் |
| 3. | உறைவது | - | இ) காற்று |
| 4. | ஒளி | - | ஈ) கதிரவன் |

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.இ 2.ஆ 3.அ 4.ஈ
இ) 1.ஈ 2.இ 3.ஆ 4.அ ஈ) 1.இ 2.அ 3.ஆ 4.ஈ
**விடை** : ஈ) 1.இ 2.அ 3.ஆ 4.ஈ

4. உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர்?

அ) திருமூலர் ஆ) அகத்தியர் இ) வள்ளுவர் ஈ) தொல்காப்பியர்

**விடை :** ஈ) தொல்காப்பியர்

5. " வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுள் பெருக்கம் உண்டாம்" என்ற பாடலைப்பாடியவர்

அ) திருமூலர் ஆ) ஔவையார்

இ) தொல்காப்பியர் ஈ) கம்பர்

**விடை :** ஆ) ஔவையார்

6. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | மேற்கு | - | அ) வாடை |
| 2. | வடக்கு | - | ஆ) குடக்கு |
| 3. | தெற்கு | - | இ) குணக்கு |
| 4. | கிழக்கு | - | ஈ) தென்றல் |

அ) 1.ஈ 2.இ 3.அ 4.ஆ ஆ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ

இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.இ 2.ஈ 3.ஆ 4.அ

**விடை :** ஆ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ

7. முந்நீர் என்பதன் பொருள்

அ) கடல் ஆ) கப்பல் இ) பயணம் ஈ) நீர்

**விடை :** அ) கடல்

8. பொருந்தாத ஒன்றினைத் தேர்வு செய்க

அ) வளி ஆ) தென்றல் இ) புயல் ஈ) கடல்

**விடை :** ஈ) கடல்

9. "வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" எனக் கூறும் நூல் ________.

அ) தென்றல் விடு தூது ஆ) சிலப்பதிகாரம்

இ) மணிமேகலை ஈ) புறநானூறு

**விடை :** ஆ) சிலப்பதிகாரம்

10. பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது என்ற நூலின் ஆசிரியர் ________.

அ) இளங்கோவடிகள் ஆ) ஔவையார்

இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் ஈ) திருமூலர்

**விடை :** இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்

Next Generation School



Created by Pinkz

11. 'வளிதொழில் ஆண்ட உரவோன்' – எனக் குறிப்பிடப்படும் மன்னன்

அ) கரிகாலன் ஆ) இராசராசன் இ) இராசேந்திரன் ஈ) பாழி

**விடை** : அ) கரிகாலன்

12. கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய சங்ககாலப் பெண்புலவர்

அ) ஔவையார் ஆ) ஆதிமந்தியார்

இ) அள்ளூர் நன்முல்லையார் ஈ) வெண்ணிக்குயத்தியார்

**விடை** : ஈ) வெண்ணிக்குயத்தியார்

13. முசிறி துறைமுகத்துக்கு விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்த கிரேக்க மாலுமி.

அ) ஹிப்பாலஸ் ஆ) யுவான்சுவாங்க்

இ) பிளைனி ஈ) தாலமி

**விடை** : அ) ஹிப்பாலஸ்

14. ஜீன் முதல் செப்டம்பர் வரை வீசும் பருவக்காற்று

அ) வடகிழக்குப்பருவக்காற்று ஆ) தென்மேற்குப்பருவக்காற்று

இ) வடமேற்குப்பருவக்காற்று ஈ) தென்கிழக்குப்பருவக்காற்று

**விடை** : ஆ) தென்மேற்குப்பருவக்காற்று

15. அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசும் பருவக்காற்று

அ) வடகிழக்குப்பருவக்காற்று ஆ) தென்மேற்குப்பருவக்காற்று

இ) வடமேற்குப்பருவக்காற்று ஈ) தென்கிழக்குப்பருவக்காற்று

**விடை** : அ) வடகிழக்குப்பருவக்காற்று

16. உலகக் காற்றாலை உற்பத்தியில் ஐந்தாம் இடம் பெற்றுள்ள நாடு

அ) இந்தியா ஆ) அமெரிக்கா இ) சீனா ஈ) ஜப்பான்

**விடை** : அ) இந்தியா

17. இந்தியாவில் காற்றாலை மின் உற்பததியில் முதலிடம் வகிக்கும் மாநிலம்

அ) குஜராத் ஆ) கேரளா இ) தமிழ்நாடு ஈ) ஆந்திரா

**விடை** : இ) தமிழ்நாடு

18. உலகிலேயே அதிக அளவு மாசுபடுத்தும் நாடுகளில் இரண்டாமிடம் பெற்றுள்ள நாடு

அ) சீனா ஆ) அரேபியா இ) இந்தியா ஈ) ஜப்பான்

**விடை** : இ) இந்தியா

19. **இந்தியாவின் மிகுந்த உயிரிழப்பைத்தரும் காரணிகளில் ஐந்தாமிடம் பெறுவது**

அ) காற்று மாசு ஆ) நீர் மாசு இ) நில மாசு ஈ) ஒலி மாசு

**விடை :** அ) காற்று மாசு

20. **உலகக்காற்று நாள்**

அ) ஜீன் 15 ஆ) ஜுலை 15 இ) ஜனவரி 15 ஈ) டிசம்பர் 10

**விடை :** அ) ஜீன் 15

21. **'யுனிசெப்' என்பது**

அ) பருவநிலை மாறுபாடு ஆ) சிறுவர் நிதியம்

இ) உலக சுகாதார நிறுவனம் ஈ) உலக வங்கி நிறுவனம்

**விடை** :ஆ) சிறுவர் நிதியம்

22. **"பூங்காற்றே! இத்தனை நாள் உனைப் பாடதிருந்துவிட்டேன்" என்று வருந்திய கவிஞர்.**

அ) தனிநாயக அடிகள் ஆ) தேவகோட்டை வா.மூர்த்தி

இ) இளங்குமரனார் ஈ) பாரதியார்

**விடை** :ஆ) தேவகோட்டை வா.மூர்த்தி

23. **உயிரின வாழ்வின் அடிப்படை**

அ) இயற்கை ஆ) செயற்கை இ) மனிதன் ஈ) மரங்கள்

**விடை** :அ) இயற்கை

24. **தொல்காப்பியர், உலகம் என்பது ____________ ஆனது என்கிறார்.**

அ) கடவுளால் ஆ) மனிதனால்

இ) ஐம்பெரும் பூதங்களால் ஈ) இன்பதுன்பங்களால்

**விடை** :இ) ஐம்பெரும் பூதங்களால்

25. **மூச்சுப்பயிற்சியே உடலைப்பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியவர் யார்? கூறப்பட்ட நூல் எது?**

அ) மாணிக்கவாசகர், திருவாசகம் ஆ) திருமூலர், திருமந்திரம்

இ) திருநாவுக்கரசர், தேவாரம் ஈ) ஔவையார், ஆத்திச்சூடி

**விடை** :ஆ) திருமூலர், திருமந்திரம்

26. 'வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்' — என்று உரைத்தவர் யார்?

அ) ஔவையார் ஆ) இளங்கோவடிகள்

இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் ஈ) குமரகுருபரர்

**விடை :ஆ) இளங்கோவடிகள்**

27. தென்றல் காற்று என அழைக்கப்படக்காரணம்.

அ) மரம், செடி, கொடி, ஆறு, மலை தாண்டி வருவது

ஆ) வேகமாக வீசுவது இ) சுழன்று வீசுவது

ஈ) மணற்பகுதியிலிருந்து வீசுவது

**விடை :அ) மரம், செடி, கொடி, ஆறு, மலை தாண்டி வருவது**

28. 'நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற்
செந்மிழின் பின்னுதித்த தென்றலே' — என்று பெண்ணொருத்தி, தூது செல்ல காற்றினை அழைத்ததாகப் பாடியவர்

அ) ஔவையார் ஆ) இளங்கோவடிகள்

இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் ஈ) குமரகுருபரர்

**விடை : இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்**

29. "நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே" — என்ற பாடலை இயற்றியவர்

அ) வாலி ஆ) கண்ணதாசன் இ) வைரமுத்து ஈ) மீரா

**விடை : ஆ) கண்ணதாசன்**

30. நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களிஇயல்யானைக் கரிகால் வளவ!" — என்று பழங்காலத்தில் கடல் கடந்த பயணங்கள் அனைத்தும் காற்றினால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால்தான் நிகழ்ந்தன என்று குறிப்பிடும் நூல்

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) பரிபாடல் ஈ) கலித்தொகை

**விடை : அ) புறநானூறு**

31. ஹிப்பாலஸ் என்பவர் ____________.

அ) கிரேக்க மாலுமி ஆ) போர்ச்சுக்கீசிய மாலுமி
இ) பிரெஞ்சு மருத்துவர் ஈ) ஆங்கில ஆளுநர்
**விடை : அ) கிரேக்க மாலுமி**

32. பருவக்காற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்திற்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தவர் __________.

அ) வாஸ்கோடகாமா ஆ) ஹிப்பாலஸ்

இ) பார்த்தலோமியோ டயஸ் ஈ) டெமாஸ்தனிஸ்

**விடை :** ஆ) ஹிப்பாலஸ்

33. ஹிப்பாலஸ் பருவக்காற்று என்று பெயரிட்டவர்கள்

அ) யவனர் ஆ) சீனர் இ) ஆங்கிலேயர் ஈ) அமெரிக்கர்

**விடை :** அ) யவனர்

34. ஹிப்பாலஸ் பருவக்காற்று கண்டுபிடிக்கப்பட்ட நூற்றாண்டு

அ) கி.பி. முதல் நூற்றாண்டு ஆ) கி.மு. முதல் நூற்றாண்டு

இ) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு ஆ) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு

**விடை :** அ) கி.பி. முதல் நூற்றாண்டு

35. வெண்ணிக்குயத்தியார் என்பவர்

அ) சங்ககாலப் பெண்புலவர் ஆ) காப்பிய நாயகி

இ) பாண்டிமாதேவி ஈ) இடைக்காலப்பெண் புலவர்

**விடை :** அ) சங்ககாலப் பெண்புலவர்

36. “களிஇயல் யானைக் கரிகால் வளவ!” என்று பாடியவர்

அ) காக்கைப்பாடினியார் ஆ) வெண்ணிக்குயத்தியார்

இ) வெள்ளிவீதியார் ஈ) நப்பசலையார்

**விடை :** ஆ) வெண்ணிக்குயத்தியார்

37. வெண்ணிக்குயத்தியார் கரிகால் வளவனைப் புகழ்ந்து பாடும் பாடலில் ‘வளி’ எனக் குறிப்பிடப்படுவது.

அ) வலிமை ஆ) காற்று இ) விரைவு ஈ) வறுமை

**விடை :**ஆ) காற்று

38. பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்திய கிரேக்க அறிஞர்

அ) டெமாஸ்தனிஸ் ஆ) ஹிப்பாலஸ் இ) பெர்னாட்ஷா ஈ) சாக்ரடீஸ்

**விடை :** ஆ) ஹிப்பாலஸ்

39. ஹிப்பாலஸ் பருவக்காற்றின் பயனைக் கண்டறியும் முன்னரே காற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி கடல் வணிகத்தில் வெற்றி கண்டவர்கள்.

அ) வடஇந்தியர்கள் ஆ) ஆப்பிரிக்கர்கள்

இ) தமிழர்கள் ஈ) ஐரோப்பியர்கள்

**விடை** : இ) தமிழர்கள்

40. இந்தியாவின் முதுகெலும்பு

அ) நெசவு ஆ) வேளாண்மை

இ) கட்டிடத்தொழில் ஈ) பேரளவு உற்பத்தி

**விடை** : ஆ) வேளாண்மை

41. காற்று தாழ்வு மண்டலமாய்த் தவழ்ந்து புயலாய் மாறும் காலம்

அ) தென்மேற்குப் பருவக்காலம் ஆ) தென்கிழக்குப் பருவக்காலம்

இ) வடமேற்குப் பருவக்காலம் ஈ) வடகிழக்குப் பருவக்காலம்

**விடை** : ஈ) வடகிழக்குப் பருவக்காலம்

42. "வளிமிகின் வலி இல்லை" என்று பாடியவர் யார்? நூல் எது?

அ) புறநானூறு, ஐயூர் முடவனார் ஆ) ஆத்திசூடி, ஔவையார்

இ) கலித்தொகை, நல்லந்துவனார் ஈ) புறநானூறு, மதுரை இளநாகனார்

**விடை** : அ) புறநானூறு, ஐயூர் முடவனார்

43. கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று கூறும் நூல் எது? கூறியவர் யார்?

அ) புறநானூறு, ஐயூர் முடவனார் ஆ) ஆத்திசூடி, ஔவையார்

இ) கலித்தொகை, நல்லந்துவனார் ஈ) புறநானூறு, மதுரை இளநாகனார்

**விடை** : ஈ) புறநானூறு, மதுரை இளநாகனார்

44. புறஊதாக் கதிர்களைத் தடுக்கும் அரண்

அ) ஓசோன்படலம் ஆ) எரிகற்கள்

இ) விடிவெள்ளி ஈ) காடு

**விடை** :அ) ஓசோன்படலம்

45. குளிர்பதனப்பெட்டி வெளியிடும் நச்சுக்காற்று

அ) கார்பன்-டை-ஆக்சைடு ஆ) குளோரோ புளோரோ கார்பன்

இ) ஆக்சிஜன் ஈ) ஹைட்ரோ கார்பன்

**விடை** : ஆ) குளோரோ புளோரோ கார்பன்

46. குளோரோ புளோரோ கார்பன் வாயிலாக உருவாகும் பாதிப்புகளைக் குறைக்கும் விதமாகப் பயன்படுத்தும் குளிர்பதனி __________.

அ) ஹைட்ரோ கார்பன ஆ) கார்பன் மோனாக்சைடு

இ) நைட்ரஜன் ஈ) ஹைட்ரஜன்

**விடை** : அ) ஹைட்ரோ கார்பன்

47. கந்தக டை ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு ஆகியவை மழை பெய்யும் போது நீரில் கரைந்து விடுவதால் பெய்வது __________.

அ) அமிலமழை ஆ) கல் மழை இ) கன மழை ஈ) மிதமான மழை

**விடை** : அ) அமிலமழை

48. அமில மழையால் துன்பத்திற்கு உள்ளாகுபவை

i) மண் ii) நீர் iii) கட்டடங்கள் iv) காடுகள்

v) நீர்வாழ் உயிரினங்கள்

அ) i, ii - சரி ஆ) iii, iv - சரி

இ) iv, v - சரி ஈ) ஐந்தும் சரி

**விடை** : ஈ) ஐந்தும் சரி

49. குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூ,று ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்து விடும்.

அ) ஓராயிரம் ஆ) ஈராயிரம் இ) ஒரு இலட்சம் ஈ) ஒரு கோடி

**விடை** : இ) ஒரு இலட்சம்

50. ஒரு மணித்துளிக்கு 12 முதல் 18 முறை மூச்சுக்காற்றாய் நாம் வெளியிடுவது.

அ) ஆக்சிஜன் ஆ) நைட்ரஜன்

இ) கார்பன்-டை – ஆக்சைடு ஈ) ஹைட்ரஜன்

**விடை** : இ) கார்பன்-டை – ஆக்சைடு

51. மரங்கள் நம் நுரையீரலுக்குத் தேவையான __________ தருகிறது.

அ) உயிர் வளி( ஆக்சிஜன்)　　ஆ) கார்பன்டை ஆக்சைடு

இ) நைட்ரஜன்　　ஈ) ஹைட்ரஜன்

**விடை :** அ) உயிர் வளி (ஆக்சிஜன்)

52. தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவை, திருப்பாவை பாடல்களைத் தாய் மொழியில் எழுதி வைத்துப் பாடுகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளவர்.

அ) மறைமலையடிகள்　　ஆ) தனிநாயக அடிகள்

இ) ஞானியாரடிகள்　　ஈ) அமுதன் அடிகள்

**விடை :** ஆ) தனிநாயக அடிகள்

53. இயற்கையின் கூறுகளில் எதின் பங்கு கூடுதலானது?

அ) நிலத்தின்　　ஆ) நீரின்　　இ) நெருப்பின்　　ஈ) காற்றின்

**விடை :** ஈ) காற்றின்

## கவிதைப்பேழை
## பாடம் - 2

## காற்றே வா!

### பலவுள் தெரிக

1. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்

உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"

- பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை　　ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைபு　　ஈ) உவமை, எதுகை

**விடை :** ஆ) மோனை, எதுகை

Next Generation School

## குறுவினா

1. **வசன கவிதை – குறிப்பு வரைக**

உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை எனப்படும்.

ஆங்கிலத்தில் Prose Poetry என்பர்

தமிழில் பாரதியார் இதனை அறிமுகம் செய்தார்.

**சான்று :**

இவ்வுலகம் இனியது, இதிலுள்ள வான் இனிமை

யுடையது காற்றும் இனிது. **– பாரதியார்**

## கூடுதல் வினாக்கள்

**இலக்கணக் குறிப்பு : -**

சுமந்து, வீசி - வினையெச்சங்கள்
மிகுந்த - பெயரெச்சம்
நல்லொளி, நெடுங்காலம் - பண்புத்தொகைகள்
நல்லலயத்துடன் - குறிப்புப்பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம்**

| | |
|---|---|
| பாடுகிறோம் = பாடு + கிறு + ஓம்<br>பாடு - பகுதி<br>கிறு - நிகழ்கால இடைநிலை<br>ஓம் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி | வழிபடுகின்றோம் = வழிபடு + கின்று + ஓம்<br>வழிபடு - பகுதி<br>கின்று - நிகழ்கால இடைநிலை<br>ஓம் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி |

## பலவுள் தெரிக

1. **கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத இணையைக் கண்டுபிடி**

அ) மயலுறுத்து - மயங்கச்செய்
ஆ) ப்ராண – ரஸம் - உயிர்வளி
இ) லயத்துடன் - சீராக
ஈ) வாசனை - மனம்

**விடை: ஈ) வாசனை - மனம்**

2. பொருத்திக் காட்டுக.

i) பாஞ்சாலி சபதம் - 1. குழந்தைகளுக்கான நீதிப்பாடல்
ii) சுதேசமித்திரன் - 2. பாராட்டப்பெற்றவர்
iii) புதிய ஆத்திசூடி - 3. இதழ்
iv) சிந்துக்குத் தந்தை - 4. காவியம்

அ) 3, 4, 2, 1 ஆ) 1, 2, 3, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 1, 3

**விடை: இ) 4, 3, 1, 2**

3. **'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்று பாராட்டவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கவிமணி

**விடை: அ) பாரதியார்**

4. **'சிந்துக்குத் தந்தை' என்று பாராட்டவர்**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கவிமணி

**விடை: அ) பாரதியார்**

5. **கேலிச்சித்திரம், கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கவிமணி

**விடை: அ) பாரதியார்**

6. பாட்டுக்கொரு புலவன் என்று பாராட்டப்பெறுபவர்.

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கவிமணி

விடை: அ) பாரதியார்

7. **'காற்று' என்னும் தலைப்பில் வசன கவிதை எழுதியவர்.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கவிமணி

விடை: அ) பாரதியார்

8. **"காற்றே,வா**
**மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை**
**மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா" – என்று பாடியவர்**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கவிமணி

விடை: அ) பாரதியார்

9. ப்ராண-ரஸம் என்ற சொல் உணர்த்தும் பொருள்

அ) சீராக ஆ) அழகு இ) உயிர்வளி ஈ) உடல்உயிர்

**விடை : இ) உயிர்வளி**

10. வசன கவிதையைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர்

அ) பாரதிதாசன் ஆ) வல்லிக்கண்ணன்

இ) பிச்சமூர்த்தி ஈ) பாரதியார்

**விடை: அ) பாரதியார்**

11. 'காற்றே வா'' என்னும் கவிதையின் ஆசிரியர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன் ஈ) வாணிதாசன்

**விடை: அ) பாரதியார்**

12. காற்று எதைச் சுமந்து கொண்டு வரவேண்டுமென்று பாரதி அழைக்கிறார்?

அ) கவிதையை ஆ) மகரந்தத்தூளை

இ) விடுதலையை ஈ) மழையை

**விடை: ஆ) மகரந்தத்தூளை**

13. பொருத்திக்காட்டுக:

அ) மயலுறுத்து - 1. மயங்கச்செய்

ஆ) ப்ராண – ரஸம் - 2. உயிர்வளி

இ) லயத்துடன் - 3. மனம்

ஈ) வாசனை - 4. சீராக

அ) 1, 2, 4, 3 ஆ) 2, 3, 1, 4 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

**விடை : அ) 1, 2, 4, 3**

14. ஆங்கிலத்தில் **Prose Poetry (Free verse)** என்றழைக்கப்படும் வடிவத்தைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன்

**விடை: ஆ) பாரதியார்**

15. **புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணம்**

அ) பாரதியின் வசன கவிதை ஆ) ஜப்பானியரின் ஹைக்கூ

இ) வீரமாமுனிவரின் உரைநடை ஈ) கம்பரின் கவிநயம்

**விடை அ) பாரதியின் வசன கவிதை**

16. **பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள்**

i) இந்தியா ii) சுதேசமித்திரன் iii) எழுத்து iv) கணையாழி

அ) i, ii - சரி ஆ) முதல் மூன்றும் சரி

இ) நான்கும் சரி ஈ) i, ii - தவறு

**விடை அ) i, ii – சரி**

17. **பக்க மலைகள் உடைந்து வெள்ளம்**
**பாயுது பாயுது பாயுது – தாம்தரிகிட**
**என்ற இயற்கையொலிகளை உணர்வுடன் வெளிப்படுத்தும் பாடல்களைப் பாடியவர்**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன் ஈ) வாணிதாசன்

**விடை:** அ) பாரதியார்

18. **’இனிய’ வாசனையுடன் வா’ என்று பாரதி அழைத்தது**

அ) காற்று ஆ) மேகம் இ) குழந்தை ஈ) அருவி

**விடை: அ) காற்று**

19. **பாரதியார் காற்றை ‘மயலுறுத்து’ அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர்**

அ) மணம் வீசும் காற்றாய் நீ வா

ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு வா

இ) மயிலாடும் காற்றாய் நீ வா

ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

**விடை: ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு வா**

Next Generation School

# கவிதைப்பேழை

## பாடம் - 3

## முல்லைப்பாட்டு

### பலவுள் தெரிக

1. **‘பாடுஇமிழ் பனிக்கடல் பருகி’ என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?**

   அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

   இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

   **விடை :** கடல் நீர் ஆவியாகி மேகமாதல்

### குறுவினா

1. **பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**

   தம்பி அழாதே! அப்பாவும் அம்மாவும் விரைவில் வந்து விடுவார்கள். வரும்போது உனக்கு விளையாட்டுப் பொருட்களை வாங்கிக்கொண்டு வருவார்கள்

2. **மாஅல் - பொருளும், இலக்கணக்குறிப்பும் தருக**

| மாஅல் | | |
|---|---|---|
| **பொருள்** | திருமால் | பேருருவம் |
| **இலக்கணக்குறிப்பு** | செய்யுளிசை அளபெடை | உரிச்சொல் தொடர் |

### நெடுவினா

1. **முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்தியை விவரித்து எழுதுக.**

| குறிப்புச்சட்டம் |
|---|
| **மழை**<br>**தெய்வ வழிபாடு**<br>**கன்றின் வருத்தம்**<br>**வருந்தாதே**<br>**முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது** |

**மழை :**

மேகம் அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. மாவலி மன்னன் திருமாலுக்கு நீர் வார்த்து தரும்பொழுது மண்ணுக்கும், விண்ணுக்கும் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது போன்றுள்ளது மழைமேகம். அம்மழைமேகம் ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப்பருகிப் பெருந்தோற்றம் கொண்டு வலமாய் எழுகிறது. மலையைச் சூழ்ந்து விரைந்து வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது

தெய்வ வழிபாடு :

முதுபெண்கள் காவலையுடைய ஊரப்பக்கம் சென்றனர். யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் நறுமணம் கொண்ட பூக்களைச் சுற்றி ஆரவாரிக்கும். மலர்ந்த முல்லைப் பூவோடு நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவி வழிபடுவர். தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்பர்.

**கன்றின் வருத்தம்:**

**"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின் உறுதுயர் அலமரல் நோக்கி"**

சிறு தாம்புக்கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்.

**வருந்தாதே:**

புல்லை மேய்ந்த உன் தாய்மாரை வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட என் இடையர் இப்பொழுது ஓட்டி வந்து விடுவார் என்றாள் இடைமகள்.

**முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது :**

இடைமகள் மூலம் நற்சொல்லைக் கேட்டோம். நின் தலைவன் பகைவரை வென்று திறைப் பொருளோடு வருவது உறுதி. மனத் தடுமாற்றம் கொள்ளாதே!

**இலக்கணக் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| மூதூர் | - | பண்புத்தொகை |
| உறுதுயர் | - | வினைத்தொகை |
| கை தொழுது | - | மூன்றாம் வேற்றுமைத்தொகை |
| தடக்கை | - | உரிச்சொல் தொடர் |
| நன்மொழி | - | பண்புத்தொகை |
| பெரும்பெயல் | - | பண்புத்தொகை |
| சிறுபுண் | - | பண்புத்தொகை |
| அருங்கடி | - | பண்புத்தொகை |
| பெருமுதுபெண்டிர் | - | பண்புத்தொகை |
| நல்லோர் | - | வினையாலணையும் பெயர் |

பகுபத உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| பொறித்த = பொறி + த் + த் + அ<br>பொறி - பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகாலஇடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி | கொண்ட = கொள் (ண்) + ட் + அ<br>கொள் - பகுதி ள்(ண்) ஆனது விகாரம்<br>ட் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி |

| |
|---|
| பொழிந்த = பொழி+ த்(ந்) + த் + அ<br>பொழி - பகுதி<br>த் - சந்தி(ந்)ஆனது விகாரம்<br>த் - இறந்தகாலஇடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி |

| | |
|---|---|
| நிமிர்ந்த = நிமிர் + த(ந்) + த் + அ<br>நிமிர் - பகுதி<br>த் - சந்தி(ந்)ஆனது விகாரம்<br>த் - இறந்தகாலஇடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி | நோக்கு = நோக்கு + இ<br>நோக்கு - பகுதி<br>இ - வினையெச்சவிகுதி |

| |
|---|
| அசைந்த = அசை + த் + த் + அ<br>அசை - பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகாலஇடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி |

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. முல்லைப்பாட்டின் மொத்த அடிகள் ____________ .

   அ) 101   ஆ) 102   இ) 103   ஈ) 104

   விடை : இ) 103

2. முல்லைப்பாட்டு ____________ நூல் வகையைச் சார்ந்தது

   அ) எட்டுத்தொகை   ஆ) பத்துப்பாட்டு

   இ) கீழ்க்கணக்கு   ஈ) சிற்றிலக்கியம்

   விடை : ஆ) பத்துப்பாட்டு

3. **முல்லைத்திணைக்குரிய பூ வகை.**

அ) காந்தள் ஆ) பிடவம் இ) தாழை ஈ) பாதிரி

**விடை** : ஆ) பிடவம்

4. **முல்லைப்பாட்டு __________ கணக்கு நூல்களுள் ஒன்று**

அ) பதினெண்மேல்கணக்கு ஆ) பதினெண்கீழ்க்கணக்கு

இ) சிற்றிலக்கியம் ஈ) காப்பியம்

**விடை** : அ) பதினெண்மேல்கணக்கு

5. **பத்துப்பாட்டில் மிகக் குறைந்த அடிகளைக் கொண்ட நூல் __________ .**

அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) முல்லைப்பாட்டு

இ) பட்டினப்பாலை ஈ) திருமுருகாற்றுப்படை

**விடை** : ஆ) முல்லைப்பாட்டு

6. **பொருத்துக :**

1. நேமி - அ) மலை
2. கோடு - ஆ) வலம்புரிசங்கு (சக்கரத்துடன் கூடிய)
3. விரிச்சி - இ) தோள்
4. சுவல் - ஈ) நற்சொல்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ

இ) 1.ஈ 2.ஆ 3.இ 4.அ ஈ) 1.இ 2.ஈ 3.அ 4.ஆ

**விடை** : அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ

7. **வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடையவர் __________ .**

அ) முருகன் ஆ) திருமால் இ) மாவலி மன்னன் ஈ) நான்முகன்

**விடை** : ஆ) திருமால்

8. **குறுகிய வடிவம் கொண்டு நீர்வார்த்துத் தந்தவன் __________ .**

அ) முருகன் ஆ) திருமால்

இ) மாவலி மன்னன் ஈ) நான்முகன்

**விடை** : இ) மாவலி மன்னன்

Pinkz Public School
Next Generation School

9. மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து நின்றவர் ____________ .

அ) முருகன் ஆ) திருமால்

இ) மாவலி மன்னன் ஈ) நான்முகன்

**விடை :** ஆ) திருமால்

10. **"கோடு கொண்டு எழுந்த செலவு எழிலி"**
**- இவ்வடிகளில் 'மேகம்' என்னும் பொருள் தரும் சொல்.**

அ) கோடு ஆ) செலவு இ) எழிலி ஈ) கொடு

**விடை :** இ) எழிலி

11. **"கொடுங்கோற் கோவலர்" - இதில் குறிப்பிடப்படும் கோவலர் ____________ .**

அ) கோவலன் ஆ) குறவர் இ) உழவர் ஈ) இடையர்

**விடை :** ஈ) இடையர்

12. **முல்லைப்பாட்டு என்னும் நூலை இயற்றியவர் ____________ .**

அ) கபிலர் ஆ) மாங்குடிமதேனார்

இ) நப்பூதனார் ஈ) நக்கீரர்

**விடை :** இ) நப்பூதனார்

13. **மழையின் சீற்றம் இயல்பு வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களைப் படம் பிடித்துக்காட்டுவது ____________ .**

அ) சங்க இலக்கியம் ஆ) திருக்குறள்

இ) நாலடியார் ஈ) சிலப்பதிகாரம்

**விடை:** அ) சங்க இலக்கியம்

14. **'நனந்தலை உலகம்' என்பதில் 'நனந்தலை' என்பதன் பொருள்.**

அ) கவர்ந்த ஆ) அகன்ற இ) சுருங்கிய ஈ) இழந்த

**விடை:** ஆ) அகன்ற

15. **'நறுவீ' என்பதில் 'வீ' என்பதன் பொருள்.**

அ) மலர்கள் ஆ) மான்கள் இ) விண்மீன்கள் ஈ) கண்கள்

**விடை:** அ) மலர்கள்

16. பொருத்திக் காட்டுக:

i) மூதூர் - 1. உரிச்சொற்றொடர்

ii) உறுதுயர் - 2. மூன்றாம் வேற்றுமைத்தொகை

iii) கைதொழுது - 3. வினைத்தொகை

iv) தடக்கை - 4. பண்புத்தொகை

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 3, 4, 2 ஈ) 2, 1, 3, 4

**விடை:** அ) 4, 3, 2, 1

17. **பொறித்த – பகுபத உறுப்பிலக்கணத்தின்படி பிரிக்கும் முறை.**

அ) பொறி + த் + த + அ ஆ) பொறித்து + அ

இ) பொறி + த் (ந்) + த் + அ ஈ) பொறி + த் + த

**விடை:** அ) பொறி + த் + த + அ

18. **தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றவர்கள்.**

அ) இளம்பெண்கள் ஆ) முதிய பெண்டிர்

இ) தோழிகள் ஈ) சான்றோர்

**விடை:** ஆ) முதிய பெண்டிர்

19. **சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட எது பசியால் வாடிக் கொண்டிருந்தது?**

அ) பசு ஆ) இளங்கன்று இ) எருமை ஈ) ஆடு

**விடை:** ஆ) இளங்கன்று

20. **பசியால் வாடிக் கொண்டிருந்த இளங்கன்றின் வருத்தத்தைக் கண்டவள்**

அ) குறமகள் ஆ) இடைமகள் இ) தலைவி ஈ) தோழி

**விடை:** ஆ) இடைமகள்

21. **'கைய கொடுங்கோற் கோவலர் பின் நின்று உய்த்தர இன்னே வருகுவர், தாயர்' என்று யார், யாரிடம் கூறியது?**

அ) இடைமகள் இளங்கன்றிடம் ஆ) முதுபெண்டிர் பசுவிடம்

இ) தலைவன் காளையிடம் ஈ) தலைவி மேகத்திடம்

**விடை:** அ) இடைமகள் இளங்கன்றிடம்

22. **'நன்னார் நன்மொழி கேட்டனம்' – யார் யாரிடம் கூறியது?**

அ) முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது

ஆ) தலைவி முதுபெண்டிரிடம் கூறியது

இ) தோழி தலைவியிடம் கூறியது ஈ) தலைவி தலைவனிடம் கூறியது

**விடை:** அ) முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது

23. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள முல்லைப்பாட்டின் அடிகள்.

அ) 1 – 17 ஆ) 17 – 25 இ) 4 – 16 ஈ) 5 – 20

**விடை : அ) 1 – 17**

24. முல்லையின் நிலம்.

அ) காடும் காடு சார்ந்த இடமும் ஆ) மலையும், மலை சார்ந்த இடமும்

இ) வயலும் வயல் சார்ந்த இடமும் ஈ) கடலும் கடல் சார்ந்த இடமும்

**விடை : அ) காடும் காடு சார்ந்த இடமும்**

25. இருத்தலும் இருத்தல் நிமித்தமும் (காத்திருத்தல்) எந்நிலத்துக்குரிய உரிப்பொருள்.

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) பாலை

**விடை : ஆ) முல்லை**

26. கார்காலத்துக்குரிய மாதங்கள்.

அ) தை, மாசி ஆ) பங்குனி, சித்திரை

இ) ஆவணி, புரட்டாசி ஈ) கார்த்திகை, மார்கழி

**விடை : இ) ஆவணி, புரட்டாசி**

27. நப்பூதனாரின் தந்தை.

அ) பொன்முடியார் ஆ) பொன்வணிகனார்

இ) மாசத்து வணிகனார் ஈ) மாணிக்கநாயனார்

**விடை : ஆ) பொன்வணிகனார்**

28. பொன்வணிகனாரின் ஊர்.

அ) உறையூர் ஆ) மதுரை

இ) காவிரிப்பூம்பட்டிணம் ஈ) குற்றாலம்

**விடை : இ) காவிரிப்பூம்பட்டிணம்**

Next Generation School

## விரிவானம்

## பாடம் - 4

## புயலிலே ஒரு தோணி

### குறுவினா

**1. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.**

**குறிப்பு** : இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல்

தேனடையிலிருந்து விழும் தேன் துளியைப் போல சில மணித்துளிகளுக்கு ஒரு முறை நீர் 'சொட் சொட்' என விழுந்தது.

விரும்பத்தக்க தென்றலைப் போலவும், மயிலிறகின் வருடல் போலவும் மெல்லிய குளிர் உடலில் ஓடும்.

நீர் உள்ள தடாகத்திலே பல வகையான மீன்களும் தவளைகளும் தாவிக் குதிக்கும்போது ஏற்படும் ஓசையை ஒத்த 'சளப் தளப்' என்ற சத்தத்துடன் தேங்கிக் கிடந்த நீர்க் குட்டையில் குழந்தைகள் குதித்து விளையாடி மகிழ்ந்தனர்.

அமைதியான நீரோட்டம் கொண்ட நதியானது இழுத்து வரும் சிறுசிறு கட்டைமற்றும் இதர பொருட்கள் போல குழந்தைகள் ஓடும் நீரில் காகிதக் கப்பல்களை விட்டு மகிழ்ந்தனர்.

குறுவினா

1. புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

| குறிப்புச்சட்டம் |
|---|
| முன்னுரை<br>புயல் வருணனை<br>அடுக்குத்தொடர்<br>ஒலிக்குறிப்பு<br>முடிவுரை |

**முன்னுரை :**

மனித வாழ்க்கை போல இயற்கையும் இன்பம் துன்பம் நிறைந்தது. அந்த வகையில் 'புயலிலே ஒரு தோணி' என்ற புதினத்தில் பா. சிங்காரம் எழுதியுள்ள வருணனை, அடுக்குத் தொடர் மற்றும் ஒலிக்குறிப்பும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**புயல் வருணனை :**

கொளுத்தும் வெயில் இமைக்கும் நேரத்தில் மறைந்து விட்டது. பாண்டியன் அண்ணாந்து பார்த்தான். மேகங்கள் கும்மிருட்டு ஆனது. காற்றில்லாமல் ஒரே இறுக்கமானது. இடி முழக்கத்துடன் மின்னல் வானத்தைப் பிளந்தது. வானம் உடைந்தன. வெள்ளம் கொட்டியது. சூறாவளி ஆடிக்குதித்தது. வானுடன் கடல் கலந்து விட்டது. மழை தெரியவில்லை. கடல் வெறிக்கூத்தாட்டத்தால் தொங்கான் முழ்கி சிப்பங்கள் கடலில் நீந்துகின்றன. வானம், கடல், காற்று, மழை ஒன்று சேர்ந்து கூக்குரலிட்டது. வானம் பிளந்து நெருப்பைக் கக்கியது.

**அடுக்குத்தொடர் :**

தொங்கான் நடுநடுங்கித் தாவி தாவி குதித்தது. பிறகு தொங்கான் விழுந்து நொறுநொறு என்று நொறுங்கியது. சுழன்று கிறுகிறுத்துக் கூத்தாடியது.

**ஒலிக்குறிப்பு :**

தொங்கான் தாவி விழுந்தது. சுழல்கின்றது. கடலில் சிலுசிலு மரமரப்பு நொய்ங் புய்வ் நொய்ங் புய்வ் என இடி முழக்கம் செய்ய சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றன. பகல் இரவாகி உப்புக்காற்று உடலை வருடியது.

**முடிவுரை :**

புயலுக்குப் பின்னால் ஐந்தாம் நாள் கரை தென்பட்டது. அடுத்த நாள் முற்பகல் பினாங்கு துறைமுகத்தை அணுகினார்கள். பிலவானிலிருந்து சுமத்ரா வரை புயல் இப்படிப் பயமுறுத்தியது. இத்தகைய வருணனையோடு புயலில் தோணி படும்பாட்டை 'அழகாய்' விவரிக்கின்றார் பா. சிங்காரம்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. புயலிலே ஒரு தோணி என்பது.**

அ) சிறுகதை ஆ) புதினம் இ) காவியம் ஈ) கவிதை

**விடை :** ஆ) புதினம்

**2. 'புயலிலே ஒரு தோணி' என்னும் புதினத்தின் ஆசிரியர் .**

அ) ப. சிங்காரம் ஆ) மு.வ. இ) திரு.வி.க. ஈ) அகிலன்

**விடை :** அ) ப. சிங்காரம்

**3. வடஇந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை தொடங்கப்பட்ட ஆண்டு.**

அ) 2004 ஆ) 2000 இ) 1999 ஈ) 1940

**விடை :** ஆ) 2000

**4. இலங்கை தந்த புயலின் பெயர்.**

அ) அக்னி ஆ) ஆகாஷ் இ) கஜா ஈ) ஜல்

**விடை:** இ) கஜா

**5. 'கப்பித்தான்' என்பது எதைக் குறிக்கிறது.**

அ) தலைமை மாலுமி ஆ) கப்பல்
இ) புயல் ஈ) பயணி

**விடை :** அ) தலைமை மாலுமி

6. தொங்கான் என்பது எதைக் குறிக்கிறது?

அ) தலைமை மாலுமி ஆ) கப்பல் இ) புயல் ஈ) பயணி

விடை : ஆ) கப்பல்

7. புலம்பெயர்ந்த தமிழர்களைப் பற்றிய முதல் புதினம்

அ) புயலிலே ஒரு தோணி ஆ) தோணி வருகிறது

இ) கள்ளத்தோணி ஈ) அகல்விளக்கு

விடை : அ) புயலிலே ஒரு தோணி

8. தென்கிழக்காசியப் போர் மூண்டதில் மலேசியா, இந்தோனசியா பகுதிகளில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பு.

அ) ஆறாம் திணை ஆ) புயலிலே ஒரு தோணி

இ) பால் மரக்காட்டினிலே ஈ) இவற்றில் எதுவுமில்லை

விடை : ஆ) புயலிலே ஒரு தோணி

9. புயலிலே ஒரு தோணி என்னும் புதினத்தின் ______ என்னும் அத்தியாயத்தின் சுருக்கப்பட்ட பகுதி பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

அ) காவியக்கூத்து ஆ) கலைக்கூத்து இ) கடற்கூத்து ஈ) இசைக்கூத்து

விடை : இ) கடற்கூத்து

10. பா. சிங்காரத்தின் ஊர் ______ மாவட்டம் ______.

அ) சிங்கம்புணரி, சிவகங்கை ஆ) உறையூர், திருச்சி

இ) மேட்டுப்புதூர் ஈ) தென்காசி, திருநெல்வேலி

விடை: அ) சிங்கம்புணரி, சிவகங்கை

11. ப. சிங்காரம் ______ இந்தோனசியா சென்றார்.

அ) வேலைக்காக ஆ) தூதராக இ) ஆய்வாளராக ஈ) அகதியாக

விடை : அ) வேலைக்காக

12. ப. சிங்காரம் பணியாற்றிய இதழ்.

அ) தினகரன் ஆ) தினமணி இ) தினத்தந்தி ஈ) தினபூமி

விடை : இ) தினத்தந்தி

13. ப. சிங்காரத்தின் சேமிப்பான ______ இலட்சம் ரூபாயை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கினார்.

அ) ஏழரை ஆ) ஆறரை இ) நான்கரை ஈ) பத்து

விடை : அ) ஏழரை

14. ‘பல் பழப் பலவின் பயங்கெழு கொல்லி’ என்று குறிப்பிடும் நூல்

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) கலித்தொகை ஈ) நாலடியார்

**விடை : ஆ) அகநானூறு**

15. கொல்லிமலை அமைந்துள்ள மாவட்டம்.

அ) தர்மபுரி ஆ) சேலம் இ) நாமக்கல் ஈ) திண்டுக்கல்

**விடை : இ) நாமக்கல்**

16. புதுதில்லியில் உள்ள உலக வானிலை அமைப்பின் மண்டலம் சிறப்பு வானிலை ஆய்வு மையம் 2004 செப்டம்பரில் இருந்து புயல்களுக்குப் பெயர் வைக்க ______ பெயர்களைப் பட்டியலிட்டுள்ளது.

அ) 62 ஆ) 64 இ) 60 ஈ) 54

**விடை : ஆ) 64**

17. ‘பெய்ட்டி’ புயலின் பெயரைத் தந்த நாடு

அ) இந்தியா ஆ) இலங்கை இ) ஓமன் ஈ) தாய்லாந்து

**விடை : ஈ) தாய்லாந்து**

18. புயலுக்கு இந்தியா தந்துள்ள பெயர்களில் நான்கு பூதங்களைக் கண்டறி.

அ) அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல் ஆ) மேக், அக்னி, ஜல்

இ) மேக், சாகர், வாயு, ஆகாஷ் ஈ) பிஜ்லி, அக்னி, மேக், கஜா

**விடை :அ) அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல்**

18. புயலுக்கு இந்தியா தந்துள்ள பெயர்களில் நான்கு பூதங்களைக் கண்டறி.

அ) அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல் ஆ) மேக், அக்னி, ஜல்

இ) மேக், சாகர், வாயு, ஆகாஷ் ஈ) பிஜ்லி, அக்னி, மேக், கஜா

**விடை :அ) அக்னி, ஆகாஷ், பிஜ்லி, ஜல்**

19. வானிலை ஆய்வாளர்கள், பொதுமக்கள், கடல் மாலுமிகள் ஆகியோர்க்கு வானிலை எச்சரிக்கையைப் புரிந்து கொண்டு செயல்படக் கொடுக்கப்படுவது

அ) புயலின் பெயர்கள் ஆ) கலங்கரை விளக்கம்

இ) நிவாரண உதவி ஈ) திசை காட்டும் கருவி

**விடை :அ) புயலின் பெயர்கள்**

20. __________ நூற்றாண்டின் உதவியுடன் தெற்காசிய நாடுகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் குடியேறினர்.

அ) பதினெட்டாம் ஆ) பத்தொன்பதாம் இ) பதினாறாம் ஈ) பதினேழாம்

**விடை :ஆ) பத்தொன்பதாம்**

**21. ப. சிங்காரம் இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த போது இருந்த இடம்.**

அ) இந்தோனேசியா, மெபின் நகர் ஆ) இலங்கை, யாழ்ப்பாணம்

இ) மலேசியா, கோலாலம்பூர் ஈ) சீனா, பெய்ஜிங்

**விடை** :அ) இந்தோனேசியா, மெபின் நகர்

**22. பொருத்திக் காட்டுக.**

i) கப்பித்தான் - இந்தோனோசியாவிலுள்ள இடம்

ii) தொங்கான் - மீன்வகை

iii) அவுலியா - கப்பல்

iv) பிலவான் - தலைமை மாலுமி (கேப்டன்)

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 2, 1, 3, 4 ஈ) 3, 4, 2, 1

**விடை** : அ) 4, 3, 2, 1

**23. "ஓடி வாருங்கள்! இங்கே ஓடி வாருங்கள்! லெக்காஸ், லெக்காஸ்!" என்று கத்தியவன்.**

அ) பாண்டியன் ஆ) கப்பித்தான்

இ) ஜப்பானிய அதிகாரி ஈ) குஸ்டாவ்

**விடை** :ஆ) கப்பித்தான்

**24. 'தமிரோ' என்று உறுமியவர்.**

அ) மாலுமி ஆ) ஜப்பானிய அதிகாரி

இ) சீன அதிகாரி ஈ) பாண்டியன்

**விடை** :ஆ) ஜப்பானிய அதிகாரி

**25. வானிலை மாற்றத்தைக் கண்டு எழுந்து போய்ப் பார்த்தவன்.**

அ) மாலுமி ஆ) பாண்டியன் இ) கப்பித்தான் ஈ) சேரன்

**விடை** :ஆ) பாண்டியன்

# கற்கண்டு

## பாடம் - 5

## தொகைநிலைத் தொடர்கள்

### பலவுள் தெரிக

1. 'பெரிய மீசை' சிரித்தார் வண்ணச்சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

விடை : அ) பண்புத்தொகை

### குறுவினா

1. **தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.**

**தண்ணீர் குடி**

- தண்ணீரைக் குடி (இரண்டாம் வேற்றுமைத்தொகை).
- மிகுந்த தாகத்தினால் தண்ணீரைக்குடித்தேன்.

**தயிர்க்குடம்**

- தயிரை உடைய குடம் (இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை).
- கமலா தயிர்க்குடத்திலிருந்து தயிரை ஊற்றினாள்.

### குறுவினா

1. **தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.**

இப்பகுதியில் உள்ள தொகைச்சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

**மல்லிகைப்பூ**

- இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
- மல்லிகை என்னும் பூ (மல்லிகை – சிறப்புப்பெயர், பூ - பொதுப்பெயர்)

**பூங்கொடி**

- ◈ உவமைத்தொகை
- ◈ பூ போன்ற கொடி

**தண்ணீர்த்தொட்டியில்**

- ❖ இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை)
- ❖ தண்ணீரை ஊற்றும் தொட்டி

**குடிநீர் நிரப்பினாள்**

- ❖ இரண்டாம் வேற்றுமைத்தொகை
- ❖ குடிநீர் நிரப்பினாள்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?**

   அ) இரண்டு　　ஆ) நான்கு

   இ) ஐந்து　　ஈ) ஆறு

   **விடை** : ஈ) ஆறு

2. **கீழ்க்காணும் சொற்களில் உம்மைத்தொகை அல்லாத சொல் எது?**

   அ) தேர்ப்பாகன்　　ஆ) அண்ணன்தம்பி

   இ) வெற்றிலைபாக்கு　　ஈ) இரவுபகல்

   **விடை** : அ) தேர்ப்பாகன்

3. **'மதுரை சென்றார்' - இத்தொடரில் அமைந்துள்ள வேற்றுமைத்தொகை எவ்வகை வேற்றுமைத்தொகைக்குப் பொருந்தும்.**

   அ) மூன்றாம்வேற்றுமைத்தொகை　　ஆ) நான்காம் வேற்றுமைத்தொகை

   இ) ஐந்தாம் வேற்றுமைத்தொகை　　ஈ) ஆறாம் வேற்றுமைத்தொகை

   **விடை** : ஆ) நான்காம் வேற்றுமைத்தொகை

4. **பொருத்துக :**

   1. மதுரை சென்றார் - அ) வினைத்தொகை
   2. வீசு தென்றல் - ஆ) பண்புத்தொகை
   3. செங்காந்தள் - இ) இரு பெயரொட்டுப்பண்புத்தொகை
   4. மார்கழித்திங்கள் - ஈ) நான்காம் வேற்றுமைத்தொகை

   அ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ　　ஆ) 1.ஈ 2.இ 3.ஆ 4.அ



Created by Pinkz

இ) 1.ஈ 2.ஆ 3.அ 4.இ    ஈ) 1.ஈ 2.இ 3.அ 4.ஆ

**விடை** :அ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ

**5. பொருத்துக:**

1. உவமைத்தொகை - அ) முறுக்குமீசை வைத்தார்
2. உம்மைத்தொகை - ஆ) மலர்க்கை
3. அன்மொழித்தொகை - இ) வட்டத்தொட்டி
4. பண்புத்தொகை - ஈ) அண்ணன் தம்பி

அ) 1.ஆ 2.ஈ 3.அ 4.இ    ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ

இ) 1.ஆ 2.இ 3.அ 4.ஈ    ஈ) 1.இ 2.ஈ 3.அ 4.ஆ

**விடை** : அ) 1.ஆ 2.ஈ 3.அ 4.இ

**6. பண்புத்தொகை அல்லாத ஒன்று.**

அ) செங்காந்தள்    ஆ) வட்டத்தொட்டி

இ) இன்மொழி    ஈ) கொல்களிறு

**விடை** : ஈ) கொல்களிறு

**7. காலம் கரந்த பெயரெச்சம்**

அ) வினைத்தொகை    ஆ) பண்புத்தொகை

இ) உவமைத்தொகை    ஈ) உம்மைத்தொகை

**விடை** : அ) வினைத்தொகை

**8. வேற்றுமையுருபு அல்லாதது**

அ) ஐ, ஒடு    ஆ) கு, இன்    இ) ஆகிய, ஆன    ஈ) அது கண்

**விடை** : இ) ஆகிய, ஆன

**9. பொருந்தாத இணையைக் கண்டறிக**

1. வினைத்தொகை - தேர்ப்பாகன்
2. பண்புத்தொகை - இன்மொழி
3. உம்மைத்தொகை - தாய்சேய்
4. அன்மொழித்தொகை - சிவப்புச்சட்டை பேசினார்

**விடை** : 1. வினைத்தொகை - தேர்ப்பாகன்

**10. 'மலர் போன்ற கை' இதில் 'மலர்' என்பது ____ 'போன்ற' ____ 'கை' என்பது ___**

அ) உவமஉருபு – உவமை – உவமேயம்

ஆ) உவமை – உவமஉருபு – உவமேயம்

இ) உவமேயம் – உவமை – உவமஉருபு    ஈ) இவற்றுள் ஏதுமில்லை

**விடை** : ஆ) உவமை – உவமஉருபு – உவமேயம்

11. சிறப்புப் பெயர், பொதுப்பெயர் ஆகியன வரும் தொகைச்சொல்

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) இரு பெயரொட்டுப்பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை: இ) இரு பெயரொட்டுப்பண்புத்தொகை**

12. மார்கழித் திங்கள், சாரைப்பாம்பு ஆகிய சொற்களில் இடம்பெறும் பொதுப்பெயர்கள் எவை?

அ) மார்கழி, சாரை ஆ) திங்கள், பாம்பு

இ) மார்கழி, பாம்பு ஈ) திங்கள், சாரை

**விடை : ஆ) திங்கள், பாம்பு**

13. **'செங்காந்தள்' - இப்பண்புத்தொகைச் சொல்லில் மறைந்து வரும் உருபு**

அ) ஆன ஆ) ஆகிய இ) போன்ற ஈ) ஐ

**விடை** : ஆ) ஆகிய

14. **'இன்மொழி' - இப்பண்புத்தொகைச் சொல்லில் மறைந்து வரும் உருபு**

அ) ஆன ஆ) ஆய இ) போன்ற ஈ) ஐ

**விடை** : ஆ) ஆன

15. **'மதுரை சென்றாள்' - இவ்வேற்றுமைத்தொகைச் சொல்லில் இடம்பெறும் வேற்றுமை உருபு**

அ) கு ஆ) கண் இ) ஆல் ஈ) அது

**விடை** : அ) கு

16. **கரும்பு தின்றான் இத்தொடர் ____________ வேற்றுமைத்தொடர்**

அ) இரண்டாம் ஆ) மூன்றாம் இ) நான்காம் ஈ) ஆறாம்

**விடை** : அ) இரண்டாம்

17. **நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகைக்கான சொல்**

அ) தேர்ப்பாகன் ஆ) தமிழ்த்தொண்டு

இ) கரும்பு தின்றான் ஈ) மதுரை சென்றார்

**விடை** : ஆ) தமிழ்த்தொண்டு

Next Generation School

18. பொருத்திக் காட்டுக.

i) வீசு தென்றல் - 1. உம்மைத்தொகை

ii) செங்காந்தள் - 2. உவமைத்தொகை

iii) மலர்க்கை - 3. பண்புத்தொகை

iv) தாய்சேய் - 4. வினைத்தொகை

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 4, 2, 1, 3 ஈ) 2, 3, 4, 1

**விடை :** அ) 4, 3, 2, 1

19. இரு பெயரொட்டுப் பண்புத்தொகைக்கான சொல்

அ) மலர்க்கை ஆ) அண்ணன்தம்பி

இ) மார்கழித்திங்கள் ஈ) தேர்ப்பாகன்

**விடை :** இ) மார்கழித்திங்கள்

20. பொருத்துக:

i) இன்மொழி - 1. உவமைத்தொகை

ii) தாய்சேய் - 2. வினைத்தொகை

iii) முத்துப்பல் - 3. உம்மைத்தொகை

iv) வருபுனல் - 4. பண்புத்தொகை

அ) 1 2, 3, 4 ஆ) 3, 4, 2, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 4, 3, 1, 2

**விடை :** ஈ) 4, 3, 1, 2

21. சிவப்புச்சட்டை பேசினார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை :** அ) பண்புத்தொகை

## குறுவினா

1. சொற்றொடர் என்றால் என்ன?

சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தரும்.

இது தொடர் அல்லது சொற்றொடர் எனப்படும்.

எ.கா. நீர் பருகினான்.

2. **தொகைநிலைத் தொடர் என்றால் என்ன?**

பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் சேரும் தொடர்.

இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை பண்பு முதலியவற்றின் உருபுகளோ மறைந்து வரும்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் நிற்கும்.

எ.கா. கரும்பு தின்றான்.

3. **தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை :

- ♣ வேற்றுமைத்தொகை
- ♣ வினைத்தொகை
- ♣ பண்புத்தொகை
- ♣ உவமைத்தொகை
- ♣ உம்மைத்தொகை
- ♣ அன்மொழித்தொகை

4. **வேற்றுமை உருபுகள் எத்தனை ? அவை யாவை?**

வேற்றுமை உருபுகள் ஆறு அவை :ஐ, ஆல், கு, இன், அது, கண்.

5. **வேற்றுமைத்தொகை என்றால் என்ன? எ.கா. தருக.**

ஒரு தொடரில் வேற்றுமை உருபுகளில் ஏதேனும் ஒன்று மறைந்து வந்து பொருள் தரும். எ.கா. மதுரை சென்றார் - மதுரைக்குச்சென்றார்.

6. **உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை என்றால் என்ன? எ.கா.தருக**

ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன்பொருளை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வரும்.

எ.கா. தேர்ப்பாகன்

தேரை ஓட்டும் பாகன் ஐ – உருபு; ஓட்டும் - பயன்

இதுவும் வேற்றுமைத்தொகையே.

7. **பண்புத்தொகையைச் சான்றுடன் விளக்குக**

அளவு, நிறம், வடிவம், சுவை ஆகியவற்றை உணர்த்தும்.

பண்புப்பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் 'மை' என்னும் பண்பு விகுதி மறைந்து வரும்.

ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகள் மறைந்து வரும்.

எ.கா. செங்காந்தள், வட்டத்தொட்டி

8. **இரு பெயரொட்டுப் பண்புத்தொகை என்றால் என்ன? சான்று தருக.**

சிறப்புப் பெயர் முன்னும் பொதுப் பெயர் பின்னுமாக வரும்

இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கி வரும்.

எ.கா: மார்கழித்திங்கள்

9. **உவமைத்தொகை என்றால் என்ன? எடுத்துக் காட்டு தந்து விளக்குக.**

உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையில் உவம உருபு மறைந்து வரும்

எ.கா. மலர்க்கை, உவமை – மலர் , உவமேயம் - கை, உவம உருபு – போன்ற மலர் போன்ற கை எனப் பொருள்படும்.

10. **உம்மைத்தொகை என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.**

இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வரும்.

எ.கா. தாய்சேய் , அண்ணன் தம்பி

தாயும் சேயும் , அண்ணனும் தம்பியும் என விரிந்து பொருளை உணர்த்துகின்றன.

11. **அன்மொழித்தொகை என்றால் என்ன?**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைசொற்கள் மறைந்து நின்று பொருள் தரும்

எ.கா. முறுக்கு மீசை வந்தார்.

முறுக்கு மீசையை உடையவர் வந்தார் எனத் தொகை நிலைத் தொடர்களில் அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருகிறது.

12. **உம்மைத்தொகை எத்தனை அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும். அவை யாவை?**

உம்மைத்தொகை நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும். அவை

- ♣ எண்ணல்
- ♣ எடுத்தல்
- ♣ நீட்டல்
- ♣ முகத்தல்

13. **இடைச்சொல் மறைந்து வரும் தொகைச்சொற்கள் எவை?**

- ❖ வேற்றுமைத்தொகை
- ❖ வினைத்தொகை
- ❖ பண்புத்தொகை
- ❖ இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
- ❖ உவமைத்தொகை
- ❖ அன்மொழித்தொகை

14. **வினைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.**

காலம் கரந்த பெயரெச்சம், காலம் காட்டும். இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்கும். வினைப்பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நடக்கும்.

எ.கா. வீசு தென்றல் என்பது. வீசிய தென்றல், வீசுகின்ற தென்றல், வீசும் தென்றல் என முக்காலத்திற்கும் பொருந்தும்.

# வாழ்த்து மடல் எழுதுக

**மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

**அன்புள்ள நண்பன் அரசுக்கு,** **திருநெல்வேலி**

12.03.2020

உன் உயிர் நண்பன் எழுதுவது நலம் நலமறிய ஆவல்,

நேற்றைய நாளிதழில் "மரம் இயற்கையின் வரம்" என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப்போட்டியில் பங்கு கொண்டு முதல் பரிசு பெற்றதைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினோம். நாளிதழிலும் அக்கட்டுரை வெளிவந்திருந்தது. அதனைப்படித்துப் பார்த்தோம்.

**மரம்தான் மரம்தான் மனிதன் மறந்தான் மரத்தை**

என்று நீ எழுதிய சொற்கள் விழிப்படையச் செய்துவிட்டது. நாங்களும் எங்கள் பகுதியில் மரங்களை நட்டு இயற்கை வளத்தைப் பாதுகாக்கும் செயல்களில் ஈடுபட ஆரம்பித்து விட்டோம்.

நீயும் இதுபோன்ற பல்வேறு போட்டிகளில் பங்கு கொண்டு உலகளாவிய சாதனைகளைப் பெற்று வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமைத் தேடித்தர மனதார உன்னை வாழ்த்துகிறேன்.

**உறைமேல் முகவரி:**

இப்படிக்கு
உன் உயிர் நண்பன்
**க. தமிழ்மணி**


**பெறுநர்**
ச. அரசு
103, செந்தமிழ் நகர்
ஈரோடு – 638 002.

அகராதியில் காண்க.

**அகன்சுடர், ஆர்கலி, கட்புள், கொடுவாய், திருவில்**

| | | |
|---|---|---|
| **அகன்சுடர்** | - | (அகல் என்பதன் திரிபு) அகல்சுடர் , அகன்ற சுடர் |
| **ஆர்கலி** | - | கடல், மழை, வெள்ளம், பேரொலி, ஆரவாரம் |
| **கட்புள்** | - | ஓர் புலவன் |
| **கொடுவாய்** | - | ஒரு மிருகம், பழிச்சொல், புலி, குறளை, வளைந்த வாய் |
| **திருவில்** | - | இந்திரவில் |

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



ஏ! மானிடா........... ஏ! மானிடா
என்னை (மரத்தை) அழித்தாய்
எனக்கும் ஒரு காலம் வரும்
பள்ளிக்குழந்தைகள்
புத்தகப்பை சுமப்பது போல
உயிர்வளிக்காக
என்னையும் நீ சுமப்பாய் ........
உயிர்வாழ்வதற்கு

**கலைச்சொல் அறிவோம்.**

- ♣ **Storm** - புயல்
- ♣ **Tempest** - பெருங்காற்று
- ♣ **Sea Breeze** - புயல்
- ❖ **Tomado** - சூறாவளி
- ❖ **Land Breeze** - நிலக்காற்று
- ❖ **Whirlwind** - சுழல்காற்று